CC No.78/2019, நாள்: 01.02.2021

அ.சா.9 ___ திரு.கமலேசன், காவல் ஆய்வாளர்

முதல் விசாரணை வாக்குமூலம்:-

நான் தற்போது ராயக்கோட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். போச்சம்பள்ளி காவல் நிலைய குற்ற எண்.63/2019 ஆக போச்சம்பள்ளி காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கே.மணி என்பவர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தை மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை 14.2.2019ம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே காலை 7.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தியாகராஜன், சங்கர் ஆகியோர் முன்னிலையில் மாதிரிவரைபடம் தயார் செய்தும், பார்வை மகஜர் தயார் செய்து கையொப்பம் பெற்று தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும். பின்னர் சாட்சிகள் பிரதாப், முரளிதரன், மாது, ஜீவா, தியாகராஜன், சங்கர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் பழனி, திருமலை ஆகியோர்கள் நீதிமன்ற பிணையில் சென்றுள்ளனர். பின்பு சாட்சி பிரதாப்-க்கு சிகிச்சையளித்த முத்துசெல்வி என்பவரை சந்தித்து காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு போச்சம்பள்ளி காவல் நிலைய காவலர் 1681 முருகேசன் மற்றும் போச்சம்பள்ளி காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மணி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(1) இதச-ன் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

குறுக்கு விசாரணை

இவ்வழக்கில் முதன்முதலில் எந்த தேதியில் முதல் தகவல் அறிக்கை என்னுடைய பார்வைக்கு வைக்கப்பட்டது என்றால் 13.2.2019ம் தேதி வைக்கப்பட்டது. அதேபோல் குற்ற எண்.64/2019 வழக்கில் இவ்வழக்கின் எதிரிதான் புகார்தாரர் என்றால் சரிதான். இவ்வழக்கின்

சாட்சிகள் அந்த வழக்கில் எதிரிகளாக உள்ளனர் என்றால் சரிதான். மேற்படி 2 வழக்குகளுமே சம்பவம் தேதியும் நேரமும் ஒன்று என்றால் சரிதான். குற்ற எண்.63/2019ல் சம்பவ இடமாக விக்கினம்பட்டியிலுள்ள வாதி பிரதாப்பிற்கு சொந்தமான நிலத்தில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற எண்.64/2019 வழக்கில் சம்பவ இடமாக விக்கினம்பட்டியிலுள்ள வாதி மாதேஸ்வரியின் நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 2 வழக்குகளிலும் வாதிக்கு பாத்தியப்பட்ட நிலம் என்று 2 இடங்களை குறிப்பிட்டுள்ளேன் என்றால் 2 வழக்குகளின் வாதிகளும் அவர்களுக்கு பாத்தியப்பட்டதாக சொல்லித்தான் புகார்கொடுத்தார்கள். நிலம் அவர்களுக்கு பாத்தியப்பட்டதாக கூறியிருக்கும் நிலையில் கிராம நிர்வாக அலுவலரை விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் விசாரிக்கவில்லை. கிராம நிர்வாக அலுவலரை விசாரித்திருந்தால் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எதிரிகளுக்குத்தான் உரிமையானது என்று உண்மை தெரிந்துவிடும் என்தபால்தான் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 2 வழக்குகளிலுமே காவலர் முருகேசன்தான் புகார் வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். 2 வழக்குகளிலுமே சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மணி என்பவர்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். 2 வழக்குகுளிலுமே நான்தான் புலன்விசாரணை அதிகாரி என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் உரிமையியல் பிரச்சனையில்தான் இந்த சம்பவம் நடைபெற்றதாக தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். உரிமையியல் பிரச்சனைக்காகத்தான் பிரச்சனை ஏற்பட்டது என தெரிந்தும் சம்மந்தப்பட்ட இடம் யாருக்கு பாத்தியம் என்று நான் விசாரித்து தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.உரிமையியல் பிரச்சனைக்கான புகார் வந்தால் காவல் நிலைய ஆணை எண்.562-ன்படி அந்த வழக்கை கைவிட வேண்டும் என்று சொன்னால் இவ்வழக்கு இருதரப்பினரும் குற்றச்செயலில் ஈடுபட்டதால் வழக்குகள் பதிவு செய்தேன். நான் சரியான முறையில் விசாரணை செய்யாமல் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன்

என்று சொன்னால் சரியல்ல. இரண்டு வழக்குகளிலுமே யார் முதலில் தாக்கினார்கள் என்று விசாரணையில் தெரியவந்ததா என்றால் மாதேஷ், பிரதிப், ஜீவா ஆகியோர்கள்தான் முதலில் சென்று தகராறு செய்ததாக தெரிந்துக்கொண்டேன். காவல் நிலைய ஆணையின்படி வலிய வந்து தாக்கியவர்கள் மீது வழக்கு பதிவுசெய்துவிட்டு மற்றொரு வழக்கை கைவிட்டிருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமானது குற்ற எண்.64/2019ன் முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது எ.சா.ஆ.1 ஆகும். மேற்சொன்ன 2 வழக்குகளிலுமே சம்பவம் நடந்த இடமாக மாதிரிவரைபடத்தில் மாதேஸ்வரிக்கு பாத்தியப்பட்ட இடமாக ஒரே இடத்தைதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். குற்ற எண்.64/2019ல் தாக்கல் செய்த பார்வை மகஜர் எ.சா.ஆ.2 ஆகும். மாதிரி வரைபடம் எ.சா.ஆ.3 ஆகும். 2 வழக்குகளிலுமே சம்பவம் நடந்த இடம் மாதேஸ்வரிக்கு பாத்தியப்பட்ட இடம் என்று தெளிவாக நானே குறிப்பிட்டுள்ளேன என்றால் சரிதான். அந்த விவரங்கள் தெரிந்தும் இந்த வழக்கில் எதிரிகள் மீது பொய்யாக குற்ற அறிக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். இந்தவ ழக்கில் வாதியின் உறவினர்களைதான் சாட்சிளாக சேர்த்துள்ளேன் என்றும் மூன்றாம் தரப்பினர்களை சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரி திருமலையை சி.சி 66/2019 வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரி திருமலை சம்பவ இடத்திலேயே இல்லாததால் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 2 வழக்குகளிலுமே நானே புலன் விசாரணை அதிகாரியாக இருந்து இறுதியறிக்கை தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. 1ம் எதிரி மத்திய பாதுகாப்பு படையில் இருக்கிறார் என்றும் அவருடைய மனைவிதான் நிலங்களை கவனித்து வருகிறார் என்றும் இவ்வழக்கின் சாட்சிகள்தான் 1ம் எதிரியையும், அவரின் மனைவியையும் அடித்து காயப்படுத்திவிட்டு அவர்கள் மீதுள்ள வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக வேண்டி பொய்யாக புகார்

கொடுத்தார் என்றும் அதை சரியாக புலன் விசாரணை செய்யாமல் ஒரு தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக குற்ற அறிக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.